THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"In clause 1, *for* sub-clause (2), *substitute* the following sub-clause, namely :—

'(2) It shall come into force on the 1st day of April 1964'."

The amendment was put and carried.

Clause 1 as amended was put and carried.

The Preamble and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 9 of 1964) as amended be passed.

The motion was put and carried and the Bill as amended was passed.

(4) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 11 OF 1964).

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir. I move—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 11 of 1964)[a] be taken into consideration."

Sir, the Bill provides for certain amendment to Schedules I and II.

கனம் சபாநாயகர் அவர்களே, பொது விற்பனை வரியை அமல் நடத்துகின்ற காலத்தில் அதனால் பல சில்லறை பிரச்னைகள், கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்று சிறு வியாபாரிகள் சர்க்காரிடத்தில் தெரிவித்தார்கள். பெருங்காயம், மரம், ஐஸ், ஐஸ் ப்ரூட்; பிஸ்கட், கேக்ஸ், பிளாஸ்டிக் சாமான்கள், வாத்திய இசைக் கருவிகள் செய்கின்றவர்களுக்கு ஒரு முனை வரி இப்பொழுதிருக்கிற சட்டத்திலே போட்டிருக்கிறார்கள். ஒரு முனை வரி போடுவதன் காரணமாக ரூ. 10,000-க்குக் குறைவாக வியாபாரம் செய்தாலும் வரி விதிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஒரு முனை வரி விதிக்கிற காரணத்தினால் இந்தப் பண்டங்களுக்கு தனியாக கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் இந்தப் பொருள்களிலே வியாபாரம் செய்கிறவர்கள் ராஜ்ய சர்க்காருக்கு எழுதி மனுச்செய்து கொண்டார்கள். 'எங்களுக்கு பலமுனை விற்பனை வரியாகச் செய்துவிட்டால் ரூ. 10,000 வரையிலும் வரி கொடுக்கவேண்டாம் என்ற நிலைமை ஏற்படும், மேலும் ரூ. 50,000 வரையிலும் கம்பவுண்டு செய்யக்கூடிய சலுகையும் கிடைக்கும்' என்று

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 18th March 1964.

24th March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

தெரிவித்தார்கள். இந்த வரியைப் பரிசீலிப்பதற்கு ஒரு ஸ்டேட் லெவல் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டியிலே இதைப் பரிசீலனை செய்து, அந்தக் கமிட்டியாரும் இதை பல முனை விற்பனை வரியாக மாற்றினால் நல்லது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே இந்த திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

இரண்டாவது திருத்தம் என்னவென்றால், இப்பொழுதிருக்கிற மோட்டார் வாகனங்களுக்கு ஒரு முனை வரி இருக்கிறது. ஆனால் அந்த மோட்டாரிலே பொருத்துகின்ற டிரெயிலர்ஸுக்கு என்ன வரி என்பது சரியாக நிர்ணயம் செய்யப்படவில்லை. மோட்டார்களுக்கும், டிரெய்லர்களுக்கும் ஒரேவிதமான வரி விதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சர்க்கார் டிரெய்லர்களையும் மோட்டார் வாகனங்களுடன் சேர்ந்து ஒன்றுவது ஷெடியூலில் மூன்றுவது அயிட்டத்தின்கீழ் கொண்டுவந்திருக்கிறோம்.

மூன்றுவதாக லூப்ரிகேடிங் ஆயில். கிரீஸ்கள், இவற்றிற்கெல்லாம் ஒருமுனை வரி இருக்கிறது. இந்த லூப்ரிகேடிங் ஆயில், கிரீஸ்களிலே, க்வெஞ்சிங் ஆயில் என்ற ஒன்று உண்டு. அந்த ஆயில் இதிலே சேர்ந்ததா இல்லையா என்பது பிரச்னை. அவ்வாறு அது சேர்ந்ததா இல்லையா என்ற விளக்கம் கேட்டதன் காரணமாக அதுவும் ஒரு மினரல் ஆயில் என்ற காரணத்தால், அதையும் கிரீஸில் சேர்த்து திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம்விட மிகவும் முக்கியமான திருத்தம் என்னவென்றால் இன்றைக்கு நூல் மீது ஒரு சதவிகிதம் என்று இருந்ததை இரண்டு சதவிகிதமாக உயர்த்துகிறோம். அதுபோல பட்டு, நார்பட்டு, ஆர்டிபிஷியல் சில்க் போன்ற யார்ன் நூல்களின் மீது இப்பொழுது இருக்கிற ஒரு சதவிகித வரியை இரண்டு சதவிகிதமாக உயர்த்தவேண்டும் என்பதுதான். இதைப்பற்றி பொது விவாதத்தின்போது எல்லோரும் பேசியிருக்கிறார்கள். சர்க்காருடைய கருத்தை நமது முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இப்பொழுது இருக்கின்ற நிலையில் உற்பத்தி செய்கின்ற மொத்த நூலில் சற்றேறக்குறைய மூன்றில் இரண்டு பகுதி வெளிராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளி ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்தால் வாங்குகிறவர்கள் மத்திய விற்பனை வரி கொடுக்கவேண்டும். மத்திய விற்பனை வரி வெளி ராஜ்ய வர்த்தகர்களால் கொடுக்கப்படவேண்டியது. ஒரு சதவிகிதம் என்று உள்நாட்டு வரி விதித்தால், வெளி ராஜ்யங்களுக்கும் ஒரே சதவிகிதம்தான் விதிக்கவேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் மூன்றில் ஒரு பங்கு நூலுக்குச் சலுகை கிடைக்கிற காலத்தில், மூன்றில் இரண்டு பங்கு வெளிராஜ்யத்தில் இருக்கிறவர்களுக்கு இந்தச் சலுகை அதிகமாகப் போகிறது. குறிப்பாக நூல் வியாபாரம் செய்கின்ற ராஜ்யங்களான பம்பாய், குஜராத் ராஜ்யங்களை எடுத்துக்கொண்டால், அந்த ராஜ்யங்களிலே இரண்டு சதவிகிதம் வெளி ராஜ்யங்களுக்கு விற்பனை செய்தால் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் மத்திய விற்பனை நடத்த

படுகிறது. அந்தக் காரணத்திற்காக நாம் இந்த வரியை ஒரு சதவிகிதத்திலிருந்து இரண்டு சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். அப்படி வரியை உயர்த்துவதன் காரணமாக தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்கள் மூன்றில் ஒரு பங்கு நூல் நம்முடைய உள்நாட்டிலே வினியோகம் ஆகின்ற நிலையில் அதிகமான வரி கொடுக்கும்படியான நிலைமை ஏற்படுமென்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் அவர்களுக்கு நாம் நிவாரணமளிக்கின்ற வகையிலே சில சலுகைகள் இத்துடன் கொடுப்பதாக இருக்கிறோம். முக்கியமாக நாம் கொண்டு வருகிற திட்டமென்னவென்றால் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய கைத்தறியாளர்களுக்கு ரிபேட் (கழிவை) பொறுத்தவரையில் இரண்டு வாரம் இப்பொழுது மத்திய சர்க்கார் கொடுப்பதை மூன்று வாரமாகக் கொடுக்கவேண்டுமென்றும் அதற்குமேல் இன்னும் தேக்கம் ஏற்பட்டால் அதற்கான நிவாரணத்தை அவ்வப்போது அளிக்கவேண்டுமென்றும் சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. அதேபோல கைத்தறி சங்கங்களுக்கு அப்பால் இருக்கிற கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு நூல் உதவி கார்ப்பரேஷனை வைத்து அந்தக் கார்ப்பரேஷனுக்கு சர்க்கார் ரூ. 10 லட்சம் உடனடியாக முதலீடு போடுவதென்றும், வருகின்ற ஆண்டிலே எந்த அளவுக்குத் தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கு இந்தக் கைத்தறி நூல் உதவிக் கார்ப்பரேஷனுக்கு மூலதனம் செலுத்துவது என்றும் முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, நம்முடைய ராஜ்யத்திலிருந்து வெளி ராஜ்யங்களுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு வரி நியாயமாக இருக்க வேண்டும். அதனால் இது தவிர்க்க முடியாத நிலையில் இருக்கிறது. இன்னொரு விஷயம். நம் ராஜ்யத்திலிருந்து வெளி ராஜ்யங்களுக்குச் செல்லும் நூல்கள் கோன் யார்ன் ஆகச் சென்று அங்கே உபயோகப்படுத்துவது பவர் லூமிலே உபயோகப்படுத்தப்பட்டு திருப்பி நம் ராஜ்யத்திலே கொணர்ந்து விற்கும்போது, அது கைத்தறித் துணியோடு போட்டிபோடும் நிலைமையில் இருக்கிறது. ஆகவே கோன் யார்ன் வெளி ராஜ்யங்களுக்குச் செல்லும்போது 2 சதவிகிதம் கொடுக்கவேண்டும் என்றால் அங்கே அவர்கள் பவர் லூமிலே நெய்தால் கூட இங்கே திருப்பி இறக்குமதி செய்யும்பொழுது, டிரான்ஸ்போர்ட் சார்ஜ்களெல்லாம் சேர்த்துப் பார்த்தால் ஏற்படும் போட்டியை ஓர் அளவுக்குத் தடுக்க முடியும். ஆகவேதான் இன்றைக்கு நூலின் மீதுள்ள வரியை உயர்த்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சபை இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 11 of 1964) be taken into consideration."

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் நூல் கோனாக இருப்பதற்கு இரண்டு பர்ஸண்ட்டு உயர்த்தி, கைத்தறிக்கு பயன்படும் சிட்டம் போட்டு

தயார் செய்யும் நூலுக்கு ஒரு பர்ஸண்டு வரி விதித்தால் சிறந்ததாக இருக்காதா என்பதற்கு விளக்கம் என்ன என்று தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : I will reply at the end of the debate.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I would like to say a few words on the Bill before the House. In clause 2 of the Bill, reference is made to "all varieties of trailers, by whatever name known". I would like to know whether the Government will give exemption to the trailers attached to the tractors belonging to the agriculturists. I request the Government to look into this aspect of the matter and give exemption to the trailors used by the agriculturists.

Regarding cotton, the Hon. Minister has stated that the rate of rebate would be enhanced for co-operative societies so as to facilitate the weavers to have certain benefits. In this connection, I may point out that the rebate that is allowed to the societies, does not generally go to the weavers and it is not being properly disbursed. So I request the Government to see that the yarn is given at a reduced rate and that the yarn goes to the weaver direct. Also, I may add that the rebate is generally utilised by the master-weaver of the co-operative society. I want the Government to look into this aspect of the matter.

திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது ஒருமுனை வரியிலிருந்து சில பண்டங்களுக்கு பலமுனை வரியாக மாற்றப்படுகிறது. இது மூன்றாவது அல்லது நான்காவது இன்ஸ்டால்மெண்ட் என்று நினைக்கிறேன். இதை நல்ல முறையிலே பரிசீலனை செய்து ஒரு முனையிலிருந்து பல முனைக்கு மாற்றப்படுகிறது. இது குறிப்பாக வியாபாரிகள் முறையிட்டுள்ள குறைகளின் அடிப்படையில் செய்யப்படுகிறது. இப்படி ஒவ்வொரு சமயமும் பலபல பொருள்களாக மாற்றிக் கொண்டு வரும்போது நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். வர்த்தகர்கள் ஆலோசனையும் கேட்டு எவ்வளவு பொருள்களுக்கு பல முனை வரி போட வேண்டிய அவசியம் இருக்கிறது என்று பரிசீலனை செய்து அப்படித் தேவைக்கேற்ப எல்லாப் பண்டங்களுக்கும் ஒரே சமயத்தில் பலமுனை வரியாக பூரணமாக செய்து விட்டால் நலமாக இருக்கும். ஒரு முனை வரி பொதுவாக நம்முடைய ராஜ்யத்திலே புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பண்டங்களை பாதிக்கும் நிலை இருக்கிறது. இங்கே நம் ராஜ்யத்தில் ஒரு முனை வரியாக இருந்து அதே பொருளுக்கு வெளி ராஜ்யங்களில் பல முனை வரியாக இருந்தால் அல்லது வேறு வகையில் வரி விகிதம் மாறியிருந்தால் அப்படிப்பட்ட புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை பாதிக்கப்படும் ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே எவ்வளவு

சீக்கிரத்திலே செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பூரணமாக இந்த வரி விதிப்பை மாற்றி அமைக்க சர்க்கார் ஆலோசிக்க வேண்டும். அதே சமயத்தில் எல்லாவற்றையும் பூரணமாக செய்துவிட முடியாது. அப்போதைக்கப்போது ஆராய்ந்து செய்ய வேண்டிய நிலைதான் இருக்கும். அதையும் மனதில் வைத்துக்கொண்டு, நம்முடைய ராஜ்யத்திலே புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு பாதகம் ஏற்படாத நிலையில் சேல்ஸ் டாக்ஸ் அமைப்பு இருக்க வேண்டும் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே அந்த அளவில் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இப்பொழுது சபை முன் இருக்கும் மாறுதல்களை வரவேற்று முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். நஞ்சுண்டராவ்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது பருத்தி நூலுக்கு விதிக்கப்படும் வரி ஜாஸ்தியாக இருக்கிறது என்று சொல்லி தப்புப் பிரசாரம் நடைபெறுவதாக சமீபத்திலே கேள்விப்பட்டேன். அப்படித் தப்புப் பிரசாரம் செய்வதற்கு இப்பொழுது சந்தர்ப்பமும், இடமும் கிடையாது. நூலுக்கு அதிகமான வரி சர்க்கார் போடுகிறது. அதனால் பருத்தி நூலை வாங்கக் கூடாது என்று திண்டுக்கல், கோயம்புத்தூர், முதலிய இடங்களில் தேக்கம் ஏற்பட்டு இருப்பதாக தெரிகிறது. இதிலே சர்க்கார் எந்த நோக்கத்தோடு செய்கிறார்கள். இண்டர் ஸ்டேட் வியாபாரம் பாதிக்கக் கூடாது என்ற முறையில் செய்கிறார்கள். அதனால் நம் மாநிலத்தில் எந்த பாதகமும் கிடையாது. ஆகவே வியாபாரிகள் மத்தியத்தில், தப்பு அபிப்பிராயம் இருக்கக்கூடாது. பொது கல்வி, பொது அறிவு, பொது மனப்பான்மை இவை வளர அரசாங்கம் பிரசாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த வரி விதிப்பினால் கைத்தறிக்கு பாதகம் ஒன்றும் இல்லை. அப்படி ஏதாவது பாதகம் ஏற்பட்டால் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி அளிப்பதாக சர்க்கார் வாக்குறுதி கொடுத்திருக்கிறது. ஆகவே தப்புப்பிரசாரம் நடந்தால் அதை வியாபாரிகள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

SRI V. S. S. MANI rose . . .

MR. SPEAKER: According to the Assembly Rules, no hon. Member can talk for a second time.

SRI M. V. KARIVENGADAM rose . . .

MR. SPEAKER: The hon. Member can speak but he did not get up earlier.

10-00 a.m. SRI M. V. KARIVENGADAM: Sir, I want to move an amendment.

MR. SPEAKER: I do not allow it now.

THE HON. SRI R. VENKATARAMAN: The hon. Member can move it when the clauses of the Bill are taken up for consideration.

24th March 1964]

திரு. எம். வி. கரிவேங்கடம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகின்ற நேரத்தில், நமது மாநிலத்தில் கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு இப்பொழுது கொடுக்கப்படும் ரிபேட்டை விட அதிகமாக ரிபேட் தரப்படும் என்கிற முறையில் சொன்னார்கள். எந்த அளவுக்கு அது உயர்த்தப்படும், எப்பொழுதிருந்து அது கொடுக்கப்படும் என்பதையும் அவர்கள் விவரமாக சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும். இந்த விஷயத்தை மட்டும் நான் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி: பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், ஸார், செயற்கைப் பட்டு நூலுக்கு 1 சத விகிதத்திலிருந்து 2 சத விகிதமாக வரி உயர்த்தப்படுகிறது. நமது மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு துணி விற்கும்போது 2 சத விகிதம் வரி உயர்த்தப்பட்டால் நமது மாநிலத்திற்கு ஓரளவு வருமானம் வரும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், வெளி மாநிலங்களிலிருந்து தான் நமது மாநிலத்திற்கு அதிகமான செயற்கைப் பட்டு வருகிறதே தவிர, இந்த மாநிலத்திலிருந்து வேறு மாநிலங் களுக்குப் போவது இல்லை. ஆகவே, அசல் மசோதாவில் இருப்பதுபோல், 1 சத விகிதம் என்று இருந்தாலே போதுமானது என்று நான் கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் தெரிவிக்கவேண்டும்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, முதன் முதலாக, 'என்ன சலுகை கொடுக்கிறோம்?' என்று கேட்கப்பட்டது. அதற்கு முதலில் பதில் சொல்லலாம் என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது இரண்டு வாரங்களுக்கு கைத்தறி விற்பனைக்கு நாம் ரிபேட் கொடுக்கிறோம். கனம் முதல் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, 'மூன்று வாரங்களுக்கு உயர்த்தப்படும்' என்று சொன்னார்கள். இது மாத்திரம் அல்ல. இன்னும் ஏதாவது தேக்கம் ஏற்பட்டாலும், ஸ்டேட் ஹாண்ட்லூம் சொஸைட்டி மூலமாக பணம் அட்வான்ஸ் செய்து, தேக்கத்திற்கும் நிவாரணம் அளிப்பதற்கு வசதிகள் செய்யப்படும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதேபோல், கடந்த ஆண்டு களிலும் நாம் செய்து வந்திருக்கிறோம். அதற்கு இன்னும் கொஞ்சம் அதிகமான நிதி இப்பொழுது கிடைக்கும் காரணத் தால், குறிப்பாக நமக்கு சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் மூலமாக அதிகமாகக் கிடைக்கும் நிலைமையினால், இன்னும் நிதி கூட, வேண்டிய அளவுக்குக் கொடுக்க முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து 'கோன் யார்ன்" னுக்கு மாத்திரம் 2 சத விகிதம் வரி விதித்தால் என்ன?" என்று கேட்கப்பட்டது. விற்பனை வரி இலாகா நிர்வாகம் செய்வதில் இரண்டு முக்கியமான கருத்துக்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். டிஸ்க்ரிமினேஷன் இருக்கக் கூடாது என்பது ஒன்று. அமுல் நடத்துவதில் ஹராஸ்மென்ட்

இருக்கக் கூடாது என்பது இரண்டாவது. மில்களில் எக்ஸைஸ் ட்யூடி போடும் போது, ஓரளவுக்கு கோன் யார்னுக்கும் ஹாங்க் யார்னுக்கும் எக்ஸைஸ் ட்யூடி போட முடியும். மில்களில் அது உற்பத்தி ஆகிறது. ஆனால், வியாபாரத்திற்கு 'பாக்' செய்யப் பட்டு, அது மில்லைவிட்டு வெளியே வந்துவிட்டால், அதிலே உள்ளுக் குள்ளே இருப்பது கோன் யார்னா? ஹாங்க் யார்னா? என்று கண்டு பிடிக்க முடியாது. ஒவ்வொரு கட்டிலிருந்தும் பிரித்துப் பார்த்து, ட்ரான்ஸ்மிட் செய்யவேண்டும் என்ற நிலைமை ஏற்படுமானால், இதிலே கிடைக்கின்ற சலுகையை விடக் கஷ்டம் தான் இன்னும் அதிகமாகப் போய்விடும். ஆகவேதான், இதிலே ஹராஸ்மென்ட், அட்மினிஸ்ட்ரேஷனிலே இருக்கும் தொல்லைகள் ஏற்பட்டு வரியை ஏமாற்றுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் இது செய்யப்படவில்லை.

"ஆர்ட் ஸில்க்குக்கு 2 சத விகிதம் வரி ஏன் விதிக்க வேண்டும்?" என்று கேட்கப்பட்டது. வெளி ராஜ்யங்களிலிருந்து வாங்கும்போது 2 சத விகிதம் வரி கொடுக்கிறோம். இப்பொழுது நம்முடைய ராஜ்யத்திலிருந்து ஆர்ட் ஸில்க் வெளி ராஜ்யங் களுக்குப் போகவில்லை. போனால், இரண்டு சத விகிதம் அவர்கள் கொடுக்கட்டும் என்று சொன்னால் தப்பு இல்லை. இன்று நிலைமை எப்படி என்றால், வெளி ராஜ்யத்திலிருந்து நம்முடைய ராஜ்யத்திற்கு ஆர்ட் ஸில்க் வரும்போது மத்திய விற்பனை வரி கட்டித்தான் வாங்குகிறோம். இரண்டு சத விகிதம் கட்டித்தான் வாங்குகிறோம். அதேபோல், நம்முடைய ராஜ்யத்திலிருந்து வெளி ராஜ்யங்களுக்குச் செல்லுமானால், அல்லது நம்முடைய ராஜ்யத்திலேயே அது விற்பனை ஆகுமானால், அதற்கு 2 சத விகிதம் விற்பனை வரி என்று சொல்வதில் தவறு இல்லை. பொதுவாக, இந்த யார்ன் எல்லாவற்றுக்கும் ஒரே யூனிஃபார்ம் ரேட் இருப்ப தால்தான் இதை அமுல் படுத்துவதில் சுலபம் ஏற்படுமே தவிர, மற்றப்படி ஒவ்வொரு யார்னுக்கும் தனி என்றால் 'இவேஷன்' ஏற்படும், அட்மினிஸ்ட்ரேஷனில் கஷ்டம் ஏற்படும், ஹராஸ்மென்ட் முதலியவைகள் எல்லாம் ஏற்படும்.

"ட்ரெய்லர்களுக்கு ஏதாவது சலுகை கொடுக்க முடியுமா?" என்று கேட்டார்கள். மோட்டார் வெகிகிள்ஸ் டாக்சேஷனில் ஏதாவது சலுகை கொடுக்கலாமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், விற்பனை வரியிலே சலுகை கொடுக்க இயலாது. அதற்கு வேறு பரிசீலனை நடந்து கொண் டிருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரிபேட் கொடுப்பதிலே அதிகமான நன்மை இல்லை என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. ஓரளவு ஒத்துக்கொள்கிறேன். இந்த அபிப்பிராயம் நீண்ட காலமாக உண்டு. அதனால்தான் மற்ற ராஜ்யங்களில் இல்லாத ப்ராவிடென்ட் ஃபண்டு திட்டத்தை வீவர்களுக்கு நாம் கொண்டுவந்திருக்கிறோம். சற்றேறக்குறைய 50 லட்சம் முதல் 60 லட்சம் ரூபாய் வரையில் நாம் ரிபேட்

24th March 1964] [ஆர். வெங்கட்டராமன்]

கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை நாம் தறிக்காரர்களுக்குக் கொடுப்போமானால் அதுவே ஒரு பெரிய வசதியாக இருக்கும். ஏன் ரிபேட் கொடுக்கிறோம்? மில் துணியோடு கைத்தறித் துணி போட்டி போட முடியவில்லை என்ற நிலைமை இருக்கும் காரணத்தால், கைத்தறித் துணி குறைவான விலைக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக ரிபேட் கொடுக்கிறோம். இது வீவர்களுக்கோ, மாஸ்டர் வீவர்களுக்கோ போகவில்லை. உண்மையாகவே பர்ச்சேஸர்களுக்குத்தான் இது போகிறது. யார் கைத்தறித் துணி வாங்குகிறார்களோ அவர்களுக்கு இது போகிறது. இதனால் ரிபேட் முறையை நாம் நீடித்துக் கொண்டிருக்கிறோம்.

கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள், முழு லிஸ்டையுமே மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு அந்த விதமான பரிசீலனை செய்யலாம் என்று நினைத்தது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். ஆனால், இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி காரணமாக, எந்த விதமான குழப்பத்தையும் உண்டாக்கக் கூடாது என்பதற்காக அந்தப் பரிசீலனையை நாம் இப்பொழுது செய்யவில்லை.

கனம் அங்கத்தினர் திரு. நஞ்சுண்ட ராவ் அவர்கள் சொல்கிற போது, 'இதைப்பற்றி தவறான கருத்துக்களெல்லாம் பரப்புகிறார்கள்' என்று சொன்னார்கள். அதுதான் ஜனநாயகத்தினுடைய அடிப்படை உரிமை. என்ன என்ன நல்ல காரியம் செய்தாலும் அதைப்பற்றி தவறான அபிப்பிராயங்களைப் பரப்புவதற்குக்கூட எதிர்க் கட்சிகளுக்கு உள்ள உரிமையை நம்மால் பரிக்க முடியாது. கனம் அங்கத்தினர் போன்றவர்கள்தான், 'அந்த விதமான நிலைமை இல்லை' என்று சொல்ல வேண்டுமே தவிர, இதை யாரும் தடுக்க முடியாது. குறிப்பாக ஒன்று மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த வரி விதிப்பினால் எந்த விதமான பாதகமும் ஏற்படவே ஏற்படாது என்று நான் சொல்லவில்லை. ஏற்படும் பாதகம் மிகக் குறைவு. அந்தக் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை ராஜ்ய சர்க்கார் ஏற்கெனவே எடுத்து முடிவு செய்துவிட்டது. அந்தக் கஷ்டங்கள் ஒன்றும் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளும் படியாக நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 11 of 1964), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER : The question is—

"That clause 2 do stand part of the Bill."

SRI M. V. KARIVENGADAM : Sir, I move the following amendment :—

"In item (ii), *for* the figure '2', *substitute* the figure '½'."

SRI V. S. S. MANI : I second the amendment, Sir.

SRI N. P. SENGOTTUVELU : Sir, I move the following amendment :—

"In item (iii) of clause 2, *delete* the figures and word '26, 27 and 29'."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

* **திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் தொழிலமைச்சர் அவர்கள் சில பொருள்களுக்கு ஒரு முனை வரியில் இருந்த பல முனை வரிகள் விதிப்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்துள்ளதாகச் சொன்னார்கள். அப்படி அவர் அதைக்காண்டு வந்ததற்குக் காரணம் கூறுகிறபோது பல வியாபாரிகள் பல முனை வரிகளைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில் இந்த மசோதாவைக் கொண்டுவந்ததாகக் குறிப்பிட்டார்கள். அப்படி அவர்கள் பல முனை வரிகளுக்குக் கொண்டு வந்திருக்கிற பொருள்களில் சிலவற்றுக்காவது விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய திருத்தம். அப்படிப்பட்ட பொருள்களில் **all kinds of ice-fruits, biscuits and cakes**— இவை நடுத்தர வர்க்கத்தையும், கீழ்த்தர வர்க்கத்தையும் பாதிக்கக் கூடியவை. இந்தப் பொருள்கள் மக்களுடைய ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதவை. ஆகவே இவற்றுக்காவது விதி விலக்கு அளிக்கவேண்டும் என்பதற்காகவே நான் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். மேலும் மரம் போன்ற பொருள்கள் நடுத்தர மக்களுக்கு வீடு கட்டவும், பிற பொருள்களைச் செய்து கொள்ளவும் மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. ஆகவே என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் பல முனை வரியில் இருந்து இப்படிப்பட்ட பொருள்களுக்கு விலக்கு ஏற்பட நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. கரிவேங்கடம் அவர்களுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் இதனால் பலன் அடைகிறவர்கள்

பிற ராஜ்யத்தில் இருந்து நம் ராஜ்யத்திற்கு வந்து வாங்குகிற வியாபாரிகள்தான். இதை முன்பே விளக்கிவிட்டேன். ஆகவே அவரது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

இரண்டாவது திரு. செங்கோட்டுவேலுவினுடைய திருத்தம் சரியாகக்கூட இல்லை. அவரது திருத்தத்தை எடுத்துக் கொண்டால் "In item (iii) of Clause 2 delete the figures and words "26, 27 and 29"" என்பதனால் அதை எடுத்தால் 3 சத விகிதம் ஒரு முனை வரியாக இருக்கும். நான் ஷெட்யூலில் இருப்பதை நீக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். நீக்கினால் பலமுனை வரி வரும். இவரது திருத்தப்படி இதை நீக்கினால் ஒருமுனை வரியாகப் போய்விடும். ஆகையால் இந்தத் திருத்தமே சரியானதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு கொள்கை அளவில் பார்த்தாலும் இன்றைய தினம் மக்களுக்கு இன்றியமையாத பால் போன்ற பொருள்களுக்குக்கூட 1 சத விகிதம் வரி போடுகிறோம். அப்படிப் போடுகிறபோது இதற்கு வரி வேண்டாம் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே இதை எதிர்க்கின்றேன்.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: நான் கொடுத்திருக்கிற திருத்தப்படி இந்தப் பொருள்களுக்கு ஒரு முனை வரி இருக்க வேண்டும் என்பதுதான்.

MR. SPEAKER: An amendment cannot go directly against the clause; it cannot nullify the clause itself.

THE HON. SRI R. VENKATARAMAN: The hon. Member can oppose the clause. But he cannot amend the clause by using the word "not" thereby negativing the very proposition.

The amendment of Sri M. V. Karivengadam was put and lost.

The amendment of Sri N. P. Sengottuvelu was by leave withdrawn.

Clause 2 was put and carried.

Clause 3 was put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 11 of 1964) be passed."

MR. SPEAKER: The question is—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 11 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.